## 125. எண்ணி எண்ணி பார்க்கிறேன்

### பல்லவி

எண்ணி எண்ணி பார்க்கிறேன்
என் இனிய தேவனை
அவர் செய்த நன்மைகளை
நன்றியோடு பாடிடுவேன்

### சரணங்கள்

1. மரண வாசலில் உம்மை நோக்கி கூப்பிட்டேன்
என் கரம் பிடித்து என்னை தூக்கி விட்டீரே
நாசமும் மோசமும் என்னை அனுகாமலே
இதுவரை தாங்கினீர் தப்புவித்து நடத்துகிறீர்
- எண்ணி எண்ணி

2. பாழும் நிலத்திலே புதைந்து கிடந்த என்னையே
தேடி வந்த தேவனே உம்மையே உயர்த்துவேன்
இரக்கத்தின் உருக்கத்தால் என்னை நீர் நோக்கியே
உம் இரத்தத்தால் கழுவி உந்தன் பிள்ளையாக்கினீர்
- எண்ணி எண்ணி

3. கடந்துவந்த பாதைகளை திரும்பி நான் பார்க்கிறேன்
கண்ணீரோடு உந்தன் பாதம் முத்தமிட்டுமகிழ்கிறேன்
இதுவரை உயிரோடு காத்து வந்த தேவனே
இனிமேலும் என்னை வழிநடத்தி செல்பவரே
- எண்ணி எண்ணி